### வக்ஃபு வாரிய மசோதா:

# எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பால் கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பிவைப்பு!

## ஒன்றிய அரசு பணிந்தது!

புதுடெல்லி, ஆக.10 -

**வக்ஃபு வாரியத்தின் அதிகாரங்களைக் குறைக்க வகை செய்யும் சட்ட திருத்த மசோதாவை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்ததால் நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்புவதாக மக்களவையில் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜ் அறிவித்தார்.**

வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதா நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டவுடன் மசோதாவுக்கு அறிமுக நிலையிலேயே அனைத்து எதிர்க்கட்சிகளும் மிகக் கடுமையாக எதிர்த்தன. இதனையடுத்து வேறுவழியே இல்லாமல் வக்பு சட்ட திருத்த மசோதா தற்போது நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் பொது மக்கள் பயன்பாட்டுக்காக மசூதிகள், தர்காக்கள், மதரஸாக்களின் பெயரில் இஸ்லாமியர்கள் தானமாக நிலம் வழங்கும் இந்த நிலம் தான் வக்பு வாரிய சொத்துகள் எனப்படுகின்றன. இதற்காக 1954-ல் ஒரு சட்டம் உருவாக்கப்பட்டது. 1958-ம் ஆண்டு அனைத்து மாநிலங்களிலும் வக்பு வாரியங்களும் அமைக்கப்பட்டன.

வக்ஃபு சொத்துகளைக் கண்காணிக்கும். வக்பு வாரிய சொத்துகள் தொடர்பான விரிவான சட்டம் 1995-ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்திலும் 2013-ம் ஆண்டு அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு திருத்தம் கொண்டு வந்தது. இதனடிப்படையில்தான் வக்பு வாரியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் சுமார் 70,000 வக்ஃபு வாரிய சொத்துகள் உள்ளன. அதாவது 2 லட்சம் ஏக்கர் அளவுக்கு வக்ஃபு வாரிய சொத்துகள் இருக்கின்றன. மசூதிகள் உள்ளிட்ட 7 ஆயிரத்துக்கும் அதிகமான வக்ஃபு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றை தமிழ்நாடு வக்ஃபு வாரியம் கண்காணித்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இதே முறையில்தான் வக்ஃபு வாரியம் செயல்பட்டு வருகிறது.

தற்போது 1995-ம் ஆண்டு வக்ஃபு வாரிய சட்டத்தில் திருத்தங்களை மத்தியில் ஆளும் பாஜக அரசு கொண்டு வருகிறது. குறிப்பாக வக்ஃபு வாரியம் உரிமை கோரும் சொத்துகள் குறித்து ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு நிர்வாகக் குழு அமைக்கப்படும்; வக்ஃபு வாரியத்தில் முஸ்லிம் அல்லாத பிற மதத்தவரும் உறுப்பினராக இடம் பெறுதல்; வக்ஃபு வாரியத்தில் கணிசமான அளவு முஸ்லிம் பெண்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்குதல் உள்ளிட்ட திருத்தங்கள் இடம் பெற வாய்ப்புள்ளது.

ஒன்றிய அரசின் இந்த வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதாவுக்கு ஏற்கனவே கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. தமிழ்நாடு வக்ஃபு வாரியத் தலைவர் எம்.அப்துல் ரஹ்மான் அறிக்கையில், "வக்ஃபு சட்டங்களை பலவீனப்படுத்த பா.ஜ.க. முயற்சித்தால் நாடாளுமன்றத்தின் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் அந்த முயற்சியைத் தோற்கடிக்கக்கூடிய வகையிலான வேலைகளை - நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணி கட்சிகள் மட்டுமின்றி, ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் நிதீஷ்குமார், சந்திரபாபு நாயுடு கட்சிகளில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் இந்த சட்டத் திருத்தம் நிறைவேற்றப்படாமல் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்று சேர வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என தெரிவித்திருந்தார். மேலும் மஜ்லிஸ் கட்சித் தலைவர் ஓவைசியும் கடும் எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் மக்களவையில் நேற்று ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு இந்த மசோதாவைத் தாக்கல் செய்தார். இதனையடுத்து மசோதா மீது விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் காங்கிரஸ், திமுக, சமாஜ்வாதி, இடதுசாரிகள், மஜ்லிஸ் கட்சி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அனைத்தும் மசோதாவை கடுமையாக எதிர்த்தன. இதன் பின்னர் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு விளக்கம் அளித்தார். ஆனால் அவர் விளக்கம் அளிக்கும் போதே அதனை நிராகரித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

வக்ஃபு சட்ட திருத்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் வேறுவழியில்லாமல் இந்த மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழு ஆய்வுக்கு அனுப்பி வைப்பதாக மக்களவையில் ஒன்றிய அமைச்சர் கிரண் ரிஜுஜு அறிவித்தார்.

---

### பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில் –

# வணிக நிறுவனங்களின் பெயர் பலகை தமிழில் மாற்றிட நடவடிக்கை எடுப்பீர்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதனை சந்தித்து தமிழறிஞர்கள் கோரிக்கை!

சென்னை, ஆக. 10 -

அனைத்துத் தமிழ் இயக்கங்களின் கூட்டமைப்பு பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் பாதுகாப்பு இயக்கம் உள்ளிட்ட தமிழ் அமைப்புகள் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் தலைமையில் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநானை சந்தித்து, தமிழ்நாடு வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளை தமிழில் மாற்றிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: -

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிக்கு முதன்மை இடம் வழங்கிடவும், தெருப் பெயர்களிலுள்ள ஆங்கிலம் மற்றும் சமற்கிருதப் பெயர்களை நீக்கி தமிழ்ப் பெயரிடவும் வலியுறுத்தி கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தியதன் பயனாக, விளம்பரப் பலகைகளில் தமிழுக்கு முதன்மை இடம் வழங்கிடும் வகையில் முன்னாள் முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களால் அரசாணை வெளியிடப்பட்டது.

மேற்படி அரசாணையினை மதிக்காத தொழில் மற்றும் வணிக நிறுவனத்திடம் தண்டம் வசூலிக்கப்படும் எனவும், அப்போது அறிவிக்கப்பட்டது. அதே கருத்தினை வலியுறுத்தி இன்றைய நம் முதன்மை முதல்வர் தளபதி அவர்களும் அண்மையில் அறிக்கை வெளியிட்டார். இருப்பினும், தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் அதனை ஏற்றுப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை என்பதையே அவர்களின் ஆங்கில விளம்பரப் பலகைகள் நாடு முழுவதும் பறைசாற்றி வருகின்றன.

நம் முதல்வரின் வழியில், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களும் மேற்காணும் தமிழ் வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

யாமும், வணிகர் பேரவைத் தலைவரை சந்தித்து வணிக நிலையங்களின் பெயர்ப்பலகைகளை தமிழில் வைக்க வேண்டியுள்ளோம். தமிழ்நாடு அரசு தமிழ்ப்பெயர்ப் பலகைகள் வைக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ் அமைப்புகள் முழுமை ஒத்துழைப்புத் தருகிறோம்; ஆவன செய்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இச்சந்திப்பில் வா.மு. சேதுராமன், ஆ.சி.சின்னப்பத் தமிழர், வா.மு.சே.திருவள்ளுவன், மதிஅரசு, இசைப்பாவலர் நா.நந்தன், வை.மா.குமார், கவிஞர் காமராசன் மற்றும் தமிழ் அமைப்பினர் கலந்து கொண்டனர்.

---

### நெல்லையில் – கூடுதல் சிறப்பான ஒரு

# பிரம்மாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகம் அமைத்துத் தாருங்கள்!

## முதல்வருக்கு – நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள்!



நெல்லை, ஆக.10-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் திருநெல்வேலி மாநகரில் ஒரு பிரம்மாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை தந்தால் மாநகரப் பகுதி இன்னும் கூடுதல் சிறப்பாக அமையும் என முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கோரிக்கை மனுவில் தெரிவித்திருப்பதாவது.

"திராவிட மாடல்" ஆட்சியில் ஏராளமான நலத்திட்டங்களை திருநெல்வேலி மாவட்டம் பெற்றுள்ளது. தங்களுடைய ஆட்சியில் சாதனைகளால் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியில் உள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையானது தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு என பெயர் பெற்றது.

இங்கு நூற்றாண்டு கடந்த பழமையான கல்லூரிகள், பள்ளிகள் போன்றவை உள்ளன. மருத்துவக் கல்லூரி, சித்த மருத்துவ கல்லூரி, சட்டக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக் கழகம் திருநெல்வேலி வளாகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ பல்கலைக்கழகம் உள்ளிட்ட மற்றும் அரசு கலை, அறிவியல் கல்லூரிகளும், ஏராளமான தனியார் அரசு உதவி பெறும் பள்ளிகளும், கல்லூரிகளும் ஏராளமாக உள்ளது. பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள்.

"திராவிட மாடல்" ஆட்சியில் மாணவ, மாணவியருக்கு நான் முதல்வன் திட்டம், கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மாணவர் கள் மத்தியில் மேற்படிப்பு படிப்பதற்கான தூண்டுகோலாக உள்ளது, என்றால் அது மிகையல்ல. அதற்காக மாணவ, மாணவியர், மாவட்ட மக்கள் தங்களுக்கு நெஞ்சில் நிறைந்த நன்றியையும், பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து வருகிறார்கள்.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை நூற்றாண்டு நூலகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களாலும், கழக தளபதியார் அவர்களாலும் பிரம்மாண்டமான முறையில் கட்டப்பட்டு ஏராளமான பள்ளி கல்லூரி மாணவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். போட்டித் தேர்வுக்குச் செல்கின்ற மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகிறார்கள். எதிர்கால சந்ததியின் நலன் கருதி தாங்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலும் எல்லோருக்கும் எல்லாம் என்ற தங்களுடைய உயரிய "திராவிட மாடல்" சிந்தனைக்கு சான்றாக அமைந்துள்ளது.

அந்த வகையில் ஒரு பிரம்மாண்டமான கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை திருநெல்வேலி மாநகரப் பகுதிக்கு தந்தால் இன்னும் கூடுதல் சிறப்பாக அமையும். மக்கள் நலனுக்காக ஏராளமான திட்டங்களை, தாராளமாக தரும் முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய கருணையினால் லட்சக்கணக்கான இளைஞர்கள், மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் வாசிப்பு திறனை மேற்கொள்வதோடு, புத்தக அறிவு மேம்பட உறுதுணையாக இருக்கும். போட்டி தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளுக்கும் உறுதுணையாக இருக்கும்.

எனவே கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாநகரப் பகுதியில் ஒரு பிரமாண்ட மான நூலகத்தினை அமைத்து தர வேண்டும். என திருநெல்வேலி மாவட்ட மக்களின் சார்பாக தங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில், கந்திலி ஒன்றியம், எலவம்பட்டி ஊராட்சியில் கலைஞரின் வருமுன் காப்போம் சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் சித்திரசேனா, வட்டார மருத்துவ அலுவலர்கள் தீபா, சிந்துரா, வட்டார போக்குவரத்து அலுவலர் காளியப்பன், மாவட்ட சேர்மன் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள்.கே.ஏ.குணசேகரன், சி.கே.சுப்பிரமணி, ஒன்றியக்குழு தலைவர் திருமதி திருமுருகன், துணை சேர்மன் ஜி.மோகன்குமார், தலைவர் மேனகாவிவேகானந்தன், கவுன்சிலர். சண்முகப்பிரியா கமலநாதன், ஊராட்சி மன்ற ஒன்றிய மற்றும் துணைத்தலைவர், வார்டு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

---

### பழனி, அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு!

# இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் முத்தாய்ப்பாக அமையும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!




சென்னை, ஆக 10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் 8.08.2024 அன்று ஆணையர் அலுவலகக் கூட்ட அரங்கில் பழனியில் நடைபெறும் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழு மற்றும் 11 செயற்பாட்டு குழுக்களின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநாட்டு பணிகள் தொடர்பாக ஒவ்வொரு குழுவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்றம், அடுத்தாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள், இதர மாநாட்டு பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக்குழு கூட்ட முடிவுகளின்படி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஆகஸ்ட் 24 மற்றும் 25 தேதிகளில் பழனியில் நடைபெறுகிறது.

இம்மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து 131 முக்கிய பிரமுகர்கள் மற்றும் தமிழ்நாட்டை தவிர இதர மாநிலங்களிலிருந்து 526 முக்கிய பிரமுகர்கள் மற்றும் முருகப் பக்தர்கள் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இம்மாநாட்டில் தமிழ்க் கடவுள் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய அடியார்கள், சமயப்பணி புரிந்தோர், சமய சொற்பொழிவாளர்கள், அதிகளவில் திருப்பணி மேற்கொண்டோர் போன்றவர்களுக்கு 15 முருகனடியார்களின் பெயரில் விருதுகளும், பணமுடிப்பும் வழங்குவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு இதுவரை 65 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதற்கென அமைக்கப்பட்ட குழு விண்ணப்பங்களை பரிசீலித்து விருதாளர்களை தேர்வு செய்யும். இம்மாநாட்டில் வெளிநாட்டை சேர்ந்த 39 முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று சிறப்புரை நிகழ்த்த இருக்கின்றார்கள். மேலும், மலேசியாவிலிருந்து 35 நபர்களும், ஜப்பானிலிருந்து 70 நபர்களும், சுவிட்சர்லாந்திலிருந்து 15 நபர்களும் குழுக்களாக தங்களது சொந்தச் செலவில் மாநாட்டில் பங்கேற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பழனியில் நடைபெறும் மாநாட்டிற்காக 10,000 நபர்கள் அமரும் வகையில் மாநாட்டு பந்தலும், மிக முக்கிய பிரமுகர்கள், மற்றும் முருகப் பக்தர்களுக்காக 15 இடங்களில் உணவருந்தும் கூடங்களும், அறுபடை வீடுகளின் அரங்குகள், சிறப்பு புகைப்பட கண்காட்சி, வேல் அரங்கம், 3டி தொழில்நுட்பத்துடன் கூடிய காட்சியரங்கம் போன்றவையும் அமைக்கப்பட்டு வருகிறது. வெளிநாடுகள் மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வருகை தரும் முருக பக்தர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு 500 தங்கும் அறைகளும், திருக்கோயில் தங்கும் விடுதியில் 135 அறைகளும் தயார்படுத்தப்பட்டுள்ளன. மாநாட்டு வளாகம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளும், கல்லூரி வளாகத்தில் போதிய கழிப்பிட வசிதிகள் இருப்பினும் கூடுதலாக 60 இடங்களில் தற்காலிக கழிப்பிட வசதிகளும் ஏற்படுத்தப்படுவதோடு, அவ்வபோது தூய்மைப் பணிகளை மேற்கொள்ள சுழற்சி முறையில் 480 தூய்மைப் பணியாளர்களும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பாதுகாப்பு பணியில் 1,200 காவல் துறையினர் சுழற்சி முறையில் ஈடுபடுத்தப்படுவதோடு, விபத்து மற்றும் அவசர உதவிகளுக்கு போதிய தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ்கள், அரசு மருத்துவக் குழு, அப்பல்லோ, இராமச்சந்திரா மற்றும் காவேரி மருத்துவமனைகளின் சிறப்புக் குழுக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வருகை தரும் முக்கிய பிரமுகர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தரும் வகையில் துறையிலிருந்து செயல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் நிலையிலான அலுவலர்கள் சிறப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாநாடு தொடர்பாக விழா மலர் மற்றும் ஆய்வு மலர்கள் வெளியிடப்படுவதோடு, மாநாட்டில் பங்கேற்கும் முக்கிய பிரமுகர்களுக்கு நினைவு பரிசுகளும் வழங்கி சிறப்பு செய்யப்பட உள்ளது. இம்மாநாட்டிற்காக ரூ.1.10 கோடி நன்கொடையாக வழங்கிட உபயதாரர்கள் விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர். மேலும், அரசு சார்பில் ரூ.3 கோடியும், சுற்றுலாத்துறை சார்பில் ரூ.3 கோடியும் நிதி வழங்கப்படுகிறது. கூடுதல் நிதி தேவைக் கேற்ப அரசிடம் கோரிக்கை வைப்போம். மாநாடு நடைபெறும் நாட்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளாக இருப்பதனால் உள்ளூர் விடுமுறை தேவை இருக்காது. தனியார் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மேற்கண்ட நாட்களில் விடுமுறை அளிக்க மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநாடு தொடர்பான பணிகளை துறை செயலாளர், ஆணையர், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர், காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருவதால் இம்மாநாடு இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் முத்தாய்ப்பாக அமையும்.

காசி-இராமேசுவரம் ஆன்மிகப் பயணத்தை ஒன்றிய அரசு தொடங்குவதற்கு முன்பே கடந்த 04.05.2022 அன்று நடைபெற்ற 2022-2023-ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை சட்டமன்ற மானியக் கோரிக்கையின்போது முதன் முதலாக அறிவிப்பை வெளியிட்டோம். முதல் பயணத்தை 22.02.2023 அன்று இராமேசுவரத்தில் தொடங்கி மூன்று கட்டங்களாக 200 மூத்த குடிமக்களை அரசு நிதியில் ரூ.50 இலட்சத்தில் காசிக்கு அழைத்துச் சென்று வந்தோம்.

அதனைத் தொடர்ந்து 2024-ஆம் ஆண்டில் முதல் பயணத்தை 31.01.2024 அன்று தொடங்கி 5 கட்டங்களாக 300 நபர்களை ரூ.75 லட்சம் அரசு மானியத்தில் அழைத்து சென்று வந்துள்ளோம். இந்தாண்டு 420 மூத்த குடிமக்களை ரூ.1.05 கோடி அரசு மானியத்தில் 7 கட்டங்களாக அழைத்து செல்ல அறிவிப்பு வெளியிட்டுள்ளோம். ஒன்றிய அரசிற்கு தோன்றுவதற்கு முன்பாகவே இராமேசுவரம் - காசி ஆன்மிகப் பயணத்தை அறிவித்து இதுவரை 500 மூத்த குடிமக்களை அழைத்து சென்று செயல்படுத்திய ஆன்மிக அரசு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு தொடர்பாக அனைத்து பணிகளும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு தான் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இம்மாநாட்டில் முதலமைச்சர், மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் ஆகியோரின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்கள் தவத்திரு பேரூர் ஆதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார், மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள், தவத்திரு இரத்தினகிரி பாலமுருனடிமை சுவாமிகள், சுகிசிவம், மு.பெ.சத்தியவேல் முருகனார், திருமதி தேசமங்கையர்க்கரசி, கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா. சுகுமார், ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா. கவிதா, தலைமை பொறியாளர் பொ.பெரிய சாமி, கண்காணிப்பு பொறியாளர் (தலைமையிடம்) ச.செல்வராஜ், பழனி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் க.சந்திர மோகன், அறங்காவலர்கள் ச.மணிமாறன், கே.எம்.சுப்பிரமணியன், ரா.ராஜசேகரன், திருமதி ஜெ.சத்யா, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### வில்லியனூர் அரசு மருத்துவமனையில்

# 24 மணி நேரமும் இயங்கும் ஆம்புலன்ஸ் வாகனம் தேவை!

## புதுச்சேரி சட்டப் பேரவையில் இரா.சிவா வலியுறுத்தல்!



புதுச்சேரி, ஆக. 10-

வில்லியனூர் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் டிரைவர் இல்லாததால் சிகிச்சைக்கு வந்த முதியவர் தனியார் வாகனத்தில் தாமதமாக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போது வழியில் பரிதாமபாக இறந்தது சம்பந்தமாக பேரவையின் கவனத்திற்கு கொண்டு வந்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பேசியதாவது:-

புதுச்சேரி நலவழித்துறையின் கீழ் இயங்கும் வில்லியனூர் அரசு மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள் 24 மணிநேரமும் பணியில் இருப்பதில்லை. ஆம்புலன்ஸ் இருந்தும் அவசரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை, மருத்துவ உபகரணங்கள் போதிய அளவில் இல்லாமை போன்ற பல்வேறு பிரச்சனைகள் குறித்து கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த அவையின் கவனத்தை ஈர்த்து வருகிறேன். ஆனாலும் நலவழித்துறை மெத்தனமாக இருந்து வருகிறது.

இந்நிலையில் வில்லியனூர் அடுத்த சேந்தநத்தம் கிராமத்தைச் சேர்ந்த முனுசாமி (வயது72) என்பவர் நேற்று மாலை சங்கராபரணி ஆற்றங்கரை பகுதியில் 100 நாள் வேலை செய்து கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக ஆற்றில் தவறி விழுந்துவிட்டார். அருகே இருந்த வர்கள் அவரை மீட்டு டாடா ஏசி வாகனத்தில் வில்லியனூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக புதுச்சேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல மருத்துவர் பரிந்துரைத்துள்ளார்.

ஆனால் அவசர சிகிச்சைக்கு அழைத்துச் செல்லும் ஆம்புலன்ஸ் இருந்தும் ஓட்டுநர் இல்லாத காரணத்தால் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்ட பெரியவர் முனுசாமியை மீண்டும் டாடா ஏசி வாகனத்தில் குளுக்கோஸ் பாட்டில் ஏற்றியவாறு காலதாமதமாக புதுச்சேரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால் பெரியவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார்.

அவசரத்திற்காக மருத்துவமனையில் நிறுத்தப்பட்டுள்ள ஆம்புலன்சிற்கு என்று பகல், இரவு என 24 மணி நேரமும் பணியாற்றுகின்ற வகையில் நான்கு ஓட்டுநர் இருந்தும் அவசர சிகிச்சைக்கு வந்த பெரியவரை காப்பாற்ற முடியவில்லை. இதுகுறித்து விசாரித்த போது, ஆம்புலன்ஸ் ஓட்டுநர்களில் மூன்று பேர் (அய்யனார், முருகன், சுப்புராயன்) நிரந்தர ஓட்டுநர் என்றும் ஒருவர் (வைத்தீஸ்வரன்) ஒப்பந்த ஊழியர் என்றும் அவரின் ஒப்பந்தகாலம் முடிந்த நிலையில் அவர் பணிக்கு வரவில்லை என்றும் தெரிகிறது. முருகன் என்ற ஓட்டுநர் தொடர் விடுமுறை எடுத்துள்ளார். மீதியுள்ள இரண்டு ஓட்டுநர்கள் சுழற்சி முறையில் பணியில் இருந்திருக்கு வேண்டும். அவர்கள் பணியில் இருந்திருந்தால் விலைமதிக்கமுடியாத ஓர் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும்.

ஆகவே, இதுகுறித்து நலவழித்துறை உரிய விசாரணை மேற்கொண்டு, இது போன்ற சம்பவம் இனியும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவும், வில்லியனூர் மருத்துவமனைக்கு என்று 24 மணி நேரமும் இயங்க கூடிய புதிய ஆம்புலன்ஸ் வாகனம் ஒன்றை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் இந்த அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.